### வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு

# 5 - 6 வது மண்டலத்தில் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்! மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, அக்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (22.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க நகர் 6வது மண்டல அலுவலகம் மற்றும் அதனைத் தொடர்ந்து இராயபுரம் 5வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாநகராட்சி 5வது மண்டல அலுவலகத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னை மாநகராட்சி சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்த ஆண்டும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து இன்று (22.10.2025) காலை மண்டலம் 6-க்குட்பட்ட திரு.வி.க. நகர் மற்றும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்களும், அந்த பகுதியின் வட்டார துணை ஆணையர் அவர்களும், தொகுதி பொறுப்பாளர் கணேசன் ஐ.ஏ.எஸ். அவர்களும் ஒருங்கிணைந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் அவர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மண்டலம் 6-க்குட்பட்ட தேவைகளின் அடிப்படையில், வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரி க்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலோசனை நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர்கள் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து அதற்கேற்ப கூட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தற்பொழுது மண்டலம் 5-க்குட்பட்ட இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், மதிப்பிற்குரிய மண்டலக்குழு தலைவர் திரு. ஸ்ரீராமுலு அவர்களும், வட்டார துணை ஆணையர் ரவி சார் அவர்களும் உட்பட பிற துறை சார்ந்த அதிகாரிகளும் இந்த கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மண்டலம் 5-க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டதுடன், இன்று மண்டலம் 5-க்கு மட்டும் ஒன்பது நிவாரண மையங்கள் (Relief Centres) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மண்டலம் 5 என்பது பொதுமக்கள் அதிகம் வசிக்கும் பகுதி என்பதால், குறிப்பாக சௌகார்பேட்டை பகுதியில் அதிக மக்கள் வசிக்கின்ற சூழலில், இந்த 9 நிவாரண மையங்கள் (Relief Centres) தயார் நிலையில் உள்ளன.

அதேபோல், தற்போது மூன்று பகுதிகளில் சமையல் கூடங்கள் (Cooking Centres) தயார் நிலையில் உள்ளன. வரவிருக்கும் நாட்களில் மழை அதிகரிக்கும் சூழல் இருந்தால், தேவையின் அடிப்படையில் வார்டு வாரியாக சமையல் கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என இந்த கூட்டத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் 5-க்குட்பட்ட 15 பகுதிகளில் 100 HP திறன் கொண்ட பம்பிங் மோட்டார்கள் முன்னெச்சரிக்கையாக பொருத்தப்பட்டுள்ளன. கடந்த மாதமே பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக லோ லைன் ஏரியாக்கள் அடையாளம் காணப்பட்டு, மாநகராட்சி முழுவதும் கிட்டத்தட்ட 150 பகுதிகளில் இந்த 100 ஹெச்பி திறன் கொண்ட மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டும் இதேபோல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த ஆண்டும் அந்த அனுபவத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மண்டலம் 5-க்குட்பட்ட பகுதிகளில் Desilting பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இம்மண்டலத்தில் மட்டும் ஐந்து சுரங்கப் பாதைகள் உள்ளன. அவை முற்றிலுமாக சீரமைக்கப்பட்டுள்ளன. ரிப்பன் வளாகத்தில் உள்ள ICCC (Integrated Command & Control Centre) உட்பட்ட சிசிடிவி கேமராக்களின் மூலம் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுரங்கப் பாதைகளில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டால் உடனடியாக ICCC (Integrated Command & Control Centre) சூழல் ஏற்படுத்தப்பட்டு, தண்ணீர் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வகையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சுகாதாரத் துறை சார்பாகவும், மழைக் காலம் முடிந்தவுடன் தேவையான பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவையான மருந்துகள் மாநகராட்சி சார்பாக முன்னமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில் மருத்துவ முகாம்கள் நடைபெறும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வரவிருக்கும் பருவமழையை முன்னிட்டு பொதுமக்களோடு இணைந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், மாமன்ற உறுப்பினர்களும் இருக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக 6 செ.மீ அளவிற்கு மழை பதிவாகியுள்ளது. அதற்காகவே துணை முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று காலை மாநகராட்சி சார்பாக உணவு வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், மதிய உணவாக 2 லட்சத்து 30 ஆயிரம் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மழை இல்லை என்பதற்கான மாநில ஆய்வு மையத்தின் தகவலின் அடிப்படையில், வரும் 25ஆம் தேதி மீண்டும் மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பான ஏற்பாடுகள் என்னென்ன செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் பதில்:

சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு பகுதியில் 215 இடங்கள் தாழ்வான பகுதி (Low Line Area) ஏரியா என கண்டறியப்பட்டுள்ளன.

இதில் 150 பகுதிகளில் 100 ஹெச்பி திறன் கொண்ட மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் பெருமக்களும் அந்தந்த பகுதிகளை ஆய்வு செய்து, மழை அதிகரிக்கும் சூழலில் பொதுமக்களை அருகிலுள்ள திருமண மண்டபங்கள் அல்லது மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு இடமாற்றம் செய்ய முன்பாகவே அறிவித்துள்ளனர்.

மழை அதிகம் பெய்யும் சூழலில் மாற்று இடத்துக்கு பொதுமக்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கார்பேஜ் கிளீனிங் சரிவர இயங்கவில்லை என்பது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

அமைச்சர் அவர்கள், ஆய்வுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்ததாவது, அதிகமாக மார்க்கெட் இயங்கும் பகுதிகள் - பிராட்வே பஸ் ஸ்டாண்ட், பூக்கடை, சௌகார்பேட்டை ஆகிய பகுதிகளில் கூடுதலாக குழு அமைத்து, மழை நாட்களில் 10 நபர்கள் நியமிக்கப்பட்டு இந்த பணிகள் மேற்கொள்ளப்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு மையத்திற்கு கடந்த இரண்டு நாட்களில் பெறப்பட்ட புகார்கள் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

இன்று 6 சென்டிமீட்டர் அளவுக்கு மட்டுமே மழை பெய்துள்ளது.

பெரிதாக எந்த பகுதியிலும் நீர் தேக்கம் ஏற்படவில்லை.

சில இடங்களில் மரம் சாய்ந்தது என புகார்கள் வந்துள்ளன; அவை உடனடியாக சரிசெய்யப்பட்டுள்ளன.

இன்று இரவு உணவு தயாரிக்கப்படுகிறதா? என்ற செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

இல்லை. 25ஆம் தேதி பிறகு, தேவையின் அடிப்படையில் மீண்டும் உணவு தயாரிக்கப்படும்.

டெல்டா மாவட்டங்களில் சேதம் குறித்து எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டு தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு தொடர்ந்து கை கொடுக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றார். கடந்த 10 ஆண்டுகளில், விவசாயிகள் போராடிய போது, அவர்களுக்காக குரல் கொடுக்காத ஆட்சி இதுவரை இருந்தது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் எப்போதும் விவசாயிகளுக்கு உறுதுணையாக உள்ளார். இயற்கை சூழல் காரணமாக ஏற்படும் பாதிப்புகளுக்கு அவர் தீர்வுகளை அளிப்பார்.

கொசஸ்த்தலை ஆற்றின் உபரி நீர் வெளியேற்றம் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு மேயர் அவர்கள் பதில்:

கொசஸ்த்தலை ஆற்றின் வடிகால் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு அவை முழுமையாக நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புழல் சர்குலேஷன் உள்ளிட்ட பகுதிகளில் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை எந்த ஒரு பகுதியில் குறிப்பிடத்தக்க பாதிப்பு இல்லை. இவ்வாறு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர். பிரியா, திரு. வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநரும் மண்டல கண்காணிப்பு அலுவலருமான பா.கணேசன் மாநகராட்சி மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மண்டல அலுவலர்கள் சொக்கலிங்கம், விஜய்பாபு, செயற்பொறியாளர்கள் சரவணன், சதீஷ், பழனி, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மணலி 2வது மண்டலத்தில் 500 நபர்களுக்கு பரிசுப் பொருட்கள்!

## பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் வழங்கினார்!

சென்னை, அக்.23-

மணலி 2வது மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு பணியாளர்கள் 500 பேருக்கு பகுதிச் செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி மணலி 2வது மண்டலம் மணலிக்குட்பட்ட சாலைப் பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் NULM பணியாளர்கள் என 500 நபர்களுக்கு அனைவருக்கும் பண்டிகையை முன்னிட்டு மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் பட்டாசுகள் மற்றும் இனிப்புகள் வழங்கினார். அதுபோது கழக நிர்வாகிகள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (22.10.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–74க்குட்பட்ட பெரம்பூர், ராஜீவ் காந்தி நகரில் வசிக்கும் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு காலை உணவினை வழங்கினார்.



எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டில் பணிபுரிந்து வந்த சாலை பணியாளர் சி.எச்.நாகேஷ்வர் ராவ் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணியில் இருக்கும் போது திடீர் உடல்நல குறைவு ஏற்பட்டு எதிர்பாராத விதமாக காலமானார். செய்தியறிந்து பரிதிஇளம்சுருதி எம்.சி. மரியாதை செலுத்தி நிதியுதவி ரூ. 50,000 குடும்பத்திற்கு வழங்கினார். உடன் கே. சிவகுமார், ஜெகதீசன், டி. தினகரன், எம் குமார், எஸ்.சிவா, கே. ஞானப்பிரகாசம், ஜி.முனுசாமி, எஸ்.ஜகரியா, எம்.பால யோகி, கே.மோகன், எஸ்.பிரேமா, எஸ்.கோடீஸ்வரி, எம்.நாகலக்ஷ்மி, எஸ்.மாலா, உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முதல்வர் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு துணை முதல்வர் ஆலோசனைப்படி பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றியம் எஸ் அக்ரஹாரம் கிராமத்தில் மழைநீர் வெளியேற்ற பணிகளை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ். சந்திரன், ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் கே. ராஜேந்திரன், அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 245 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, அக்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 245 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (22.10.2025), துறைமுகம் மேற்கு பகுதி: 1) வட்டம் 54அ, பி.கே.ஜி.கார்டன், வால்டாக்ஸ் ரோடு, 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, 4வது கடற்கரை சாலை கோபால் செட்டி தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க.முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில் பருவ மழைக் கால முன்னேற்பாடு நடவடிக்கையாக வார்டு எண்.58, சூளை நெடுஞ்சாலைகாளத்தியப்பா தெரு சந்திப்பிலும் (மேலே) மற்றும் வார்டு எண்.77, புளியந்தோப்பு, டிமலஸ் சாலையிலும் (கீழே) மழை நீரை வெளியேற்ற வைக்கப்பட்டுள்ள நீர் வெளியேற்றும் மோட்டார்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.சி. சந்திரன்

### அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

“முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**